# தப்லீக் ஜமாஅத்தும் கம்யூனிஸ்ட்டுகளும்.

தொகுப்பு:- அம்ஜத் இப்றாகிம் (ஹுஜ்ஜத் மாசிகை ஏப்ரல்1978)

தப்லீக் கூட்டத்தினர் ஆஸ்தீக பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் கம்யூனிஸ்டுகள் நாத்திக வாதம் பேசுகின்றனர். இந்த ஒரு வேற்றுமை நீங்கலாக இவ்விரு இயக்கங்களும் ஒரே தன்மையான செயல்திட்டங்களையும், பலவந்தத்தையும், அணுகுமுறையையும்தான் பின்பற்றுகின்றன.

இவ்விஷயங்களை கீழ்காணும் விஷயங்களிலிருந்து நீங்களே உணரலாம்.

| கம்யூனிஸ்டுகள் | தப்லீகினர் |
|---|---|
| 1. கம்யூனிஸத்தை ஸ்தாபித்தவர் காரல் மார்க்ஸ் என்பதையும் அதன் கொள்கைக்கு செயல்வடிவம் தந்தவர் லெனின் என்பதையும் எல்லோரும் அறிவர். ஆனால் அவ்விருவரையும் இருட்டடிப்பு செய்துவிட்டு மாசே துங்கின் போதனைகளையும், சூ-என்-லாய் போன்றோர்களின் அறிவுரைகளையும் மட்டுமே பிரச்சாரம் செய்து வருகின்றனர். | 1. இவ்வாறே தப்லீக் இயக்கத்தினரும் அல்லாஹ், ரஸூலுடைய வசனங்களை பெரும்பாலும் இருட்டடிப்பு செய்துவிட்டு 'ஹஜ்ரத் ஜீ'க்கள் எனப்படும் மௌலவி இல்யாஸ், மௌலவி யூசுப் போன்றோரின் 'மள்பூஜாத்' எனும் போதனைகளை மட்டுமே பரப்பிக் கொண்டிருக்கின்றனர். |
| 2. சீனக் கம்யூனிஸ்டுகள் தங்களால் உண்டாகக்கப்படாத எந்த நூலையும் தமது மக்கள் படிப்பதையும் செய்தியைக் பேட்பதையும் பலாத்காரமாக தடுத்து விடுகின்றனர். | 2. இது போலவே தப்லீகினர் மௌலவி இல்யாஸ் காந்தலவியின் பிரசங்கங்கள்(அல்லது) அவரது அண்ணன் மகன் மௌலவி ஜக்கரிய்யா காந்தலவியின் நூல்கள் நீங்கலாக எந்த நூலையும் (அது தப்ஸீராக இருப்பினும் சரியே) மற்றவர் வாசிக்க முற்பட்டால் வம்பு செய்து நிறுத்தி விடகின்றனர். |
| 3. கம்யூனிஸ்டுகள் அரசியல் சாசனம், சிவில், கிரிமினல் சட்டங்கள், ஜீவாதார உரிமை போன்ற சட்டதிட்டங்களை மக்கள் தெரிந்து கொள்ளாமல் தடுத்து கம்யூனிஸத்தின் மேன்மை பற்றியும் சமதர்மச் சிறப்பு பற்றியும் மாத்திரமே திரும்கத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பர். | 3. தப்லீகர்கள் இது போலவே பர்ள்,ஷர்த், போன்ற பிக்ஹ் சட்டங்களுக்கும் உஸூல்,அகீதா போன்ற அடிப்படைகளுக்கும் தடைவித்து மக்களை குருடர்களாகவே வைத்துக் கொண்டிருப்பதுடன் எட்டு ஒவ்வொன்றுக்கும் ஏழு லட்சம் நன்மைகள் என்ற பொய்யையே சதா பாடிக் கொண்டிருக்கின்றனர். 300 சில்லாக்கள் ஒரு மூமினை அவர்கள் இழுத்துக் கொண்டு திரிந்தாலும் அவருக்கு முழுக்குடைய பர்ளை சொல்லிக் கொடுப்பதில்லை. கலிமா, பாத்திஹா, சூரா, அத்தஹிய்யாத்து, சில ஹதீதுகள் மட்டும் சொல்லிக் கொடுக்கப்படும். |

| | |
|---|---|
| 4. ஒரு மனிதனின் சுயசிந்தனா சக்தியை செயலற்றதாக்கிவிட்டு பிறர் சொல்வதையும் செய்வதையும் மட்டுமே ஏற்றுக் கொள்வதை வைத்து அதையே அவன் வாழ்வின் குறிக்கோளாக செயலாற்ற வைப்பதற்கு மூளைச் சலவை முறை(பிரய்ன் வாஷிங்) என்பார்கள். இந்த முறை சீனக் கம்யூனிஸ்ட்டுகளால் பின்பற்றப்படுகிறது. உலகின் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்களை தங்கள் இடத்திற்கு வரவழைத்து மாசேதுங்கின் கொள்கைகளை மட்டும் சீனர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்கின்றனர். | 4. இவ்வாறே தப்லீகினர் மக்களை ஆட்டு மந்தையாக டில்லிக்கு அழைத்துச் சென்று அங்கே மேற்கண்ட மூளைச் சலவை செய்கின்றனர் இதனால் ஒரு முஃமின் தப்லீகின் கொள்கை தவிர வேறெதையும் தெரிந்து கொள்ள முயல்வது மாபெரும் பாவமென எண்ணுமளவிற்கு இழுத்துச் செல்லப்படுகின்றான். |
| 5. கம்யூனிஸ்ட்டுகள் ஏதாவது ஒரு நாடு அல்லது ஸ்தாபனத்தின் ஆட்சியைக் கைப்பற்றினால் அதற்குப் பின் எக்காரணம் கொண்டும் அதை விட்டுக் கொடுப்பதில்லை. பலவித வன்முறைகள் மூலம் தமது பிடியை இறுக்கிக் கொள்வார்கள். அந்த இயக்கத்தைச் சேராத எவருமே சீனா நாடுகளில் தலையெடுக்க முடியாமல் கொலை செய்து விடுகின்றனர். | 5. இது போலவே தப்லீகர்கள் ஒரு பள்ளிவாசலின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்டால் அங்கு தப்லீகரன்றி வேறு யாரும் பயான் செய்வதையும் நிர்வாகி, இமாம், முஅத்தின் பொறுப்புக்கள் ஏற்பதையும், மௌலிது போன்ற புனித வைபவங்கள் நடைபெறுவதையும் பயமுறுத்தி பலாத்காரம் செய்து நிறுத்தி விடுகின்றனர். இன்னும் மக்களின் உரிமைகள் இவர்களால் நசுக்கப்படுகின்றன. |
| 6. ஒரு சமுதாயத்தின் நன்மைக்காக தீட்டப்படும் எந்த ஒரு திட்டமும் அது எவ்வளவு நல்லதாயிருந்தாலும் கம்யூனிஸ்ட்டுகள் அதை உடனடியாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். மாஸ்கோ அல்லது பீகிங்கிலிருந்து அனுமதி கிடைத்தால் மட்டுமே ஏற்பார்கள். | 6. இவ்விதமே ஒரு முஹல்லாவின் நன்மைக்காக முஸ்லிம்கள் கொண்டுவரும் எந்த ஏற்பாட்டையும் தப்லீகர்கள் டில்லி மர்கஸின் அனுமதியின்றி ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். |
| 7. கம்யூனிஸம் தோன்றுவதற்கு முன் உலகமே இருண்டு கிடந்ததாகவும், மார்க்ஸூம் லெனினும் பிறகு மாசேதுங்கும்தான் உலகை ஒளியாக்கினர் என்றும் பாமரர்களை நம்பச் செய்கின்றனர். | 7. இவ்வாறே ஸஹாபாக்களுக்குப் பின்னர் இஸ்லாம் இறந்துபோய் ஊறுகாய்ப் பானைக்குள் அடங்கிவிட்டது என்றும் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் வந்த மௌலவி இல்யாஸ்தான் லட்சோப லட்சம் பள்ளிவாயில்களை கட்டி இஸ்லாத்திற்கு உயிர் ஊட்டியதாக மக்களை நம்பச் செய்கிறார்கள். |
| 8. உலகில் தோன்றிய உன்னத பெரியார்கள் எவரை பற்றியும் தங்கள் பேச்சில் குறிப்பிடமாட்டார்கள். அவர்களின் கொள்கைக்குட்பட்ட சமீபகால தலைவர்களையே | 8. அது போல தப்லீகர்கள் தீனுக்காக வாழ்ந்து தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாதாக்கள்,தியாகிகள் எவரின் பெயரையும் ஏன் நான்கு இமாம்களின் பெயர்களைக் |

| | |
|---|---|
| அடிக்கடி புகழ்ந்து பேசுவார்கள். | கூடஒருக்காலும் தங்கள் பேச்சில் குறிப்பிடுவதில்லை. கண் துடைப்பிற்காக ஸஹாபாக்களின் பெயரைக் குறிப்பிட்டுக் கொண்டு பிறகு 1300 வருடங்களுக்குப் பிந்திய தமது குருமர் பலரின் பெயரை அடிக்கடிச் சொல்வார்கள். |
| 9. கம்யூனிஸத்தை ஏற்காதவர்கள் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருப்பினும் சரி. அவர்களை பிற்போக்குவாதி, பாட்டாளியின் பகைவன் என பலவாறாக தூற்றுவது வழக்கம். சீனாவின் மிக உயர்ந்த கன்பியூஷியஸ் கூட இடது கம்யூனிஸ்டுகளால் அடிக்கடி தூற்றப்படுகிறார். மாபெரும் சன்யாஸன் கூட விட்டு வைக்கப்படவில்லை. | 9. இவ்வாறே தப்லீகினர் கல்விக்கடலாம் கஸ்ஸாலி இமாமவர்கள் ஆற்றிய பணிகளெல்லாம் வீணாகிவிட்டன என்றும், ஈ ஒன்றுக்கு ஒரு சமயம் அவர்கள் நீர் குடிக்கக் கொடுத்ததுதான் அவர்களை ஈடேற்றியது என்றும் கூறக் கேட்டிருப்பீர்கள். உலகை உய்விக்க வந்த உத்தமர் கௌதுல் அஃலமவர்களை கீரனூரைச் சார்ந்த கலீல் அஹ்மது என்பவர் தாக்கி எழுதியதை தமிழ்நாடு அறியும். இவர் தப்லீகின் ஒரு கைக்கூலியாக இருந்தாலும் இது அக்கட்சியின் சொள்கையை பிரதிபலிக்கிறது என்பது தெளிவு. |
| 10. பாட்டாளியின் கூட்டாளி எனக் கூறித் திரியும் கம்யூனிஸ்டுகள் மக்களின் நலனுக்கான சில அடிப்படைத் திட்டங்களை தமது சுய நலத்திற்காகத் தகர்த்துவிட்டு அதற்குப் பதிலாக கவர்ச்சிகரமான சில புதிய திட்டங்களை நுழைத்து விடுகிறார்கள். கம்யூனிஸ்ட் நாடுகளல் மனித உரிமைகள் நசுக்கப்படும் அதே சமயத்தில் இங்குள்ள சில இடது கம்யூனிஸ்ட்டுகள் உரிமைப் போராட்டம் நடத்தி விளம்பர மறியல் செய்வது சிறந்ததொரு எடுத்துக்காட்டு. இம்முறை அடிப்படை கம்யூனிஸத்தில் காணப்படவில்லை. | 10. அல்லாஹ் அமைத்த ஐந்து திட்டமான இஸ்லாமிய கடமைகளுள் இந்த தப்லீகர்கள் ஜகாத், ஹஜ்ஜு நோன்பு போன்ற மூன்றையும் விட்டுவிட்டு அதற்குப்பதிலாக இல்மு,திக்ரு,இக்ராம்,குலூஸ் தக்கீர் என்ற நான்கு திட்டத்தையும் கொண்டு ஒரு தனி மார்க்கத்தை உருவாக்கியிருக்கின்றனர். இம்முறை எந்த நபியும், எந்த ஸஹாபியும் கூறியதில்லை. |
| 11. கம்யூனிஸ்ட்டுகள் மாசேதுங்கின் புகழைப் பரப்புவதற்காக பல சரடுகள் விடுவது வழக்கம். ஏழு நிமிசத்தில் ஏழு மைல் நீச்சல் அடித்தார் மாசே துங் என்ற கதையும், யாருமே ஓடாத நெடுந் தொலைவு ஓடினார் என்றும் மாவோவின் பெயர் கூறி ஆபரேஷன்கள் நிகழ்கின்றன என்றெல்லாம் சீனர்களின் செய்திகளில் வருவது வழக்கம். | 11. தப்லீகின் கப்சாவும் இதற்கு குறைந்தில்லை. ஹஜ்ரத்ஜீக்களின் தலையணைக்கடியில் பணம் தானாக வந்து கொண்டிருக்கிறது. டெல்லி மர்கஸில் எடுக்க எடுக்க குறைவதில்லை என்றெல்லாம் கூறுகின்றனர். கோத்ரா இஜ்திமாவில் மைய்யித்து குர்ஆன் ஓதியது, ஆண்டொன்றுக்கு இருமுறை தப்லீக்வாலாக்கள் விமானத்தில் அரபு நாடுகளுக்கு சென்று வர பணமும் எக்சேன்ஜ் பர்மிட்டும் |

| | |
|---|---|
| | அல்லாஹ்வே அனுப்பி வைக்கிறான் என்ற கதை அல்லும் பகலும் சொல்லப்பட்டு வருகிறது. |
| 12. பொதுவுடைமை என பிதற்றும் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியாளர்களாக தனது வாரிசுகளையும், உறவினர்களையுமே நியமிக்கின்றனர். இம்முறை சீனா,வடகொரியா இன்னும் இரும்புத்திரை நாடுகளில் இன்றும் அமலில் உள்ளது. | 12. அண்ணல் ரசூலுக்குப் பின் அபூபக்கர், அடுத்து உமர்! இது இஸ்லாமிய ஆட்சிமுறை. ஆனால் இல்யாஸின் ஆட்சியிலோ அத்தாவுக்குப் பின் மகன்யூசுப்! அடுத்து பேரன் ஹாரூனை விளம்பரம் செய்யப்பட்டது. ஹாரூன் இறந்துவிட அவர் சகலர் இன்ஆமுல் ஹஸன் தப்லீகின் சிம்மாசனத்தை பிடித்துள்ளார். பின்னர் ஜகரிய்யா மௌலானா என்ற சாச்சா மகன்தான் ஷைகுல் ஹதீஸாக இருப்பார். இதுதான் தப்லீகினர் கண்ட நபிவழியா? |
| 13. கம்யூனிஸ சர்வாதிகாரிகளின் இனத்தைச் சாராதார் அப்பதவியின் மீது கண் வைப்Nபுhரும் குரூரமாக ஒழிக்கப்படுவது கம்யூனிஸ வழிமுறை. சீனாவின் லஸனபியாNவுhவும், லியோஷாவோவும் பெருந்தியாகிகளாக இருந்தும் இழிவுபடுத்தப்பட்டனர் என்பதை உலகறியும். | 13. இது போலவே இந்தோனேஷியா, இலங்கை, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் தப்லீகை பரப்பிய மாபெரும் மேதை மௌலானா அப்துல் மாலிக் மதனீ எம்.ஏ. அவர்கள் ஹஜரத்ஜீயின் ஆளும் குடும்பத்தினரைச் சேராதவர் முக்கியத்துவம் பெறுகிறார் என்ற காரணத்திற்காக ஒதுக்கப்பட்டு மதீனாவில் வாழ்கிறார். தப்லீகின் சேவையினை பம்பரம் போல் சுழன்று செய்த ரஹ்மத்துல்லாஹ் மௌலானா எங்கே? ஹஜ்ரத்ஜீயின் குடும்பத்தைச் சாராத அவர் பேரும் புகழும் அடைந்து ஆட்சியை கைப்பற்ற நினைத்தால் அனுமதிக்க முடியுமா? ஒரு எட்டுக்கு ஏழு லட்சம் வீதம் எத்தனையோ கோடி நன்மையினை சேர்த்த இவர் எழுதக் கூசும் இழி செயலை செய்தாக தப்லீகினர்கள் கூறுகிறார்களே! அப்படியானால் இத்தகைய தப்லீகின் புண்ணிய ஆத்மாவிற்கு நீச எண்ணம் எப்படி வந்தது? |
| 14. கம்யூனிஸ்ட்டுகள் தம்மை பணக்காரரின் வைரி எனவும், ஏழைகளின் நண்பன் எனவும் கூறிக் கொள்வர். பதவிக்கு வந்ததும் ஏழை ஏழையாகவே நீடிப்பான். அதிகாரமும் பணமும் ஆட்சியாளர்களிடம் போய் சேர்ந்துவிடும். பொதமக்களுக்கு ஒரு வாழ்வு, ஆட்சியாளர்களுக்கு ஒரு ஆடம்பரவ hழ்வு என்ற நிலையே இன்றைய | 14. தப்லீகர்கள் துன்யாவின் வேலை ஷைத்தானின் வேலை என்றும் பணத்தை நஜீஸ் என்றும் கூறினாலும் ஊருக்கு ஊர் பணக்காரரை அமீராக நியமிப்பதில் கவனம் செலுத்துவார்கள். தொழில்களை அல்லாஹ் கவனித்துக் கொள்வான் என்று ஏழைகளிடம் கூறி மனைவி, மக்கள்களையும், தொழில்களையும், இளவயது பெற்றோர்களையும் அந்தரங்கத்தில் தவிக்க |

| | |
|---|---|
| நீனா, ரஷ்யா நிலையாகும். | விட்டு விடுவார்கள். |
| 15. மக்களாட்சி தொழிலாளர் நலன் மக்கள் நீதிமன்றம் போன்ற நல்ல சொற்களை உபயோகித்து தங்கள் சர்வாதிகாரத்தை கம்யூனிஸ்ட்டுகள் மூடி மறைக்கின்றனர். | 15. இதையே தப்லீகர்கள் காப்பியடித்து ஷப்குஸாரி, கார்க்குஸாரி, ஹல்கா த:ஃலீம், கஸ்து போன்ற நல்ல தொடர்களை ரசூல் சுன்னத்திற்கு புறம்பான தங்களது ஆதிக்க நடவடிக்கைகளை வர்ணிக்க உபயோகிக்கின்றனர். |
| 16. பழமையான பயனுள்ள பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் பத்தாம்பசலித்தனம் என்று ஒதுக்கித் தள்ளி பயனற்ற புதுமைகளை புகுத்துவது கம்யூனிஸ்ட்டுகளின் திட்டம். கலாச்சார புரட்சி என்று இரு தடவை சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் வன்முறை புரிந்து மக்களின் சமூக அமைப்பு, கட்டுப்பாடு, ஒற்றுமை ஆகியவற்றை அழித்தனர். | 16. பாமர முஸ்லிம்கள் ஒரேடியாக தீனிலிருந்து விலகிச் சென்று விடாமல் கட்டுப்படுத்தவும், அனுமதிக்கப்பட்ட சடங்குகளில் கவனத்தை செலுத்தி தீமைகளிலிருந்து அவர்களைக் காக்கவும், ஏற்படுத்தப்பட்டுள்ள மவ்லிது, கத்தம் ராத்திபு, பாத்திஹா, கந்தூரி ஆகியவற்றை சதா தூற்றி இல்யாஸ் புராணம் பாடிக் கொண்டேயிருக்கின்றனர். |
| 17. தமது கட்சியில் சேராத அனைவரின் மீதும் வெறுப்புணர்வை தூண்டிவிடுவது கம்யூனிஸ்ட்டுகளின் வழக்கம். | 17. இது போல தப்லீகில் ஈடுபடாத மக்களும் உலமாக்களும் வழிகெட்ட பாவிகள் என்ற உணர்வை இஜ்திமாக்களில் பரப்புகின்றனர். |
| 18. குறிப்பிட்ட சில நாட்களில் கூட்டம் நடத்தி அணிவகுப்பு நடத்துவது போன்ற காரியங்களில் மாவோயிஸ்டுகள் அதிகம் கவனம் செலுத்துகின்றனர். | 18. தப்லீகர்களின் இஜ்திமாக்களும், கஸ்து என்ற விளம்பர அணிவகுப்புகளும் இந்த ரகத்தை சார்ந்தவையே. |
| 19. ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஈர்த்திழுத்து கல்வியின் முக்கியத்துவத்தைக் குறைத்து கட்சி வெறியை மூட்டுவது கம்யூனிஸ சித்தாந்தம். | 19. ஹல்கா,த:ஃலீம்,கிதாபு த:ஃலீம்,சில்லா ஆகியன போதும். அரபி ஞானம் தேவையில்லை என்ற கருத்தை வளர்த்து வக்பு சொத்துக்களில் இயங்கும் மத்ரஸாக்களின் ஆசிரியர்களையும், மாணவர்களையும் கல்வியிலிருந்து கவனத்தைத் திருப்பி தப்லீகர்கள் அலைக்கழிக்கின்றனர். |
| 20. கம்யூனிஸசித்தாந்தத்தை வானாளாவப் புகழும் அதன் தலைவர்கள் தன் வாழ்வில் அதை கடைபிடிப்பதில்லை. தம் கவனத்தை வேறுபக்கம் திருப்பிவிட்டு பொமக்களை மட்டும் கோஷங்கள் எழுப்ப தூண்டிவிடுகின்றனர். | 20. பெருமானார், ஸஹாபாக்கள் செய்தது என்று அடிக்கடி முழங்கி தொழுகையைப் பற்றி அதிகதிகமாகப் பேசும் தப்லீகினர் தொழுகைக்காக பாங்கு சொல்லம் போது சுன்னத்தைப்' புறக்கணித்துவிட்டு பதில் கூறாமல் அலட்சியமாக இருந்து விடுகின்றனர். |
| 21. சிந்தனையாளர், அறிவாளிகளின் | 21. குர்ஆன், ஹதீஸ் கூறியபடி இக்ராமுல் உலமா என்னும் மார்க்க அறிஞர்களுக்கு |

| | |
|---|---|
| முக்கியத்துவத்தைக் குறித்து அவர்களை நிந்திப்பது கம்யூனிஸ நாடுகளின் வழக்கம். | மரியாதை கொடுக்கும் முறையை தவிர்த்து, இக்ராமுல் முஸ்லிமீன் என்ற ஒரு தேவையில்லாத முறையை பகட்டு காட்டுகின்றனர். |
| 22. பல நாடுகளில் சிறிய அளவில் ஊடுருவல் செய்த கம்யூனிஸ்ட் அதிகாரிகள் காலப்போக்கில் சர்வாதிகரிகளாக மாறி நாடு முழுவதையும் கைப்பற்றி மக்களின் சொத்துக்கள், தர்ம ஸ்தாபனங்கள் முதலியவற்றை அபகரித்து மாமூலான வழக்கங்களை அடியோடு மாற்றி விடுவர். | 22. ஊருக்கு ஊர் பள்ளிவாயில்களின் ஆட்சியை கைப்பற்றவும், பிரபல மத்ரஸாவின் நிர்வாகத்தை அபகரிக்கவும் தப்லீகர்கள் பின்பற்றும் கீழ்தர முறைகளும், குடும்பங்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் பிரித்து வைக்கும் சூழ்ச்சிகளும் தமிழ் நாட்டில் ஏராளம்! ஏராளம்!! இவ்வாறே தப்லீகினரும் கஷ்த், தஃலீம், பயான் எனும் பெயரில் முதலில் ஊர் மஹல்லாக்களில் ஊடுருவி நாளடைவில் பள்ளிவாயில் முழுவதையும் கைப்பற்றி அங்குள்ள நிர்வாகத்தில் தலையிடுவதோடு அதன் நடைமுறை, நிலையான நிர்வாக அமைப்பு முதலிய அனைத்தையும் பலவந்தமாக மாற்றி தமது நச்சுக் கருத்துக்களைப் புகுத்துவார்கள். தப்லீகில் சேராதவர்கள் மஹல்லா நிர்வாக் குழுவில் இருப்பின் அவர்கள் உரிமையை பறித்தும் விடுவர். |